## விருந்து போற்றுதும்

சிறுவினா

1.விருந்தை எதிர்கொள்ளும் தன்மை குறித்துக் குறுந்தொகையும் கொன்றைவேந்தனும் பதிவு செய்துள்ள கருத்துகள் யாவை?

(i) இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை

"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ.'

என்ற குறுந்தொகை(118) அடிகள் புலப்படுத்துகின்றன.

(ii)'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்' என்று கொன்றை வேந்தனில் ஔவையார் பாடியுள்ளார். அவர் பாடிய தனிப்பாடல்,

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் முரமுரெனவே புளித்த மோரும் - திறமுடனே புள்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந்து இட்டானீ(து) எல்லா உலகும் பெறும்.'

என்று அவர் கூறுவதிலிருந்து வள்ளல்களால் விருந்தினர் போற்றப்பட்டதை அறிய முடிகிறது.

2.வாழை இலை விருந்து. உணவு பரிமாறும் முறை குறித்து எழுதுக. (அல்லது) வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக."

- தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினர்க்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.
- நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.

தமிழர்களின் உணவு பரிமாறும் முறை :

- உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும்.
- ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள்.

- உண்பவர் மனமறிந்து அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

3.இன்மையிலும் விருந்தோம்பல் பற்றி இலக்கியங்கள் கூறுவன யாவை? (அல்லது) ஏழ்மையிலும் விருந்தோம்பிய தமிழர் பண்பாட்டை விவரி.

நம் முன்னோர், வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும், எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர். புறநானூறு கூறும் செய்திகள் :

- தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி.

“குரல்உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து சிறிது புறப்பட்டன்றோ இலள்.” - என்று புறநானூறு கூறுகிறது.

- நேற்று வந்த விருந்தினரை பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன். இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு, இச்செய்தியைக் கூறும் பாடலடிகள்

‘‘நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன் இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக் கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்...”

பெரியபுராணம்:

- இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை.
- எனவே, அன்று விதைத்துவிட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் கூறப்படுகிறது.

4.மினசோட்டா தமிழ்ச்சங்கம் கொண்டாடும் “வாழையிலை விருந்து விழா” வைப் பற்றி எழுது.

- அமெரிக்காவில் உள்ள மினசோட்டா தமிழ்ச்சங்கம் “வாழையிலை விருந்து விழா “வை ஆண்டுதோறும் அக்டோபர் 26 அன்று கொண்டாடி வருகின்றது.
- தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகளைக் கொண்டு வாழையிலையில் விருந்து வைக்கின்றனர்.
- முருங்கைக் காய் சாம்பார், மோர்க்குழம்பு, வேப்பம்பூ ரசம், வெண்டைக்காய்க் கூட்டு, தினைப் பாயசம், அப்பளம் எனச் சுவையாகத் தமிழர் விருந்து கொடுக்கின்றனர்.

- அங்கு வாழும் தமிழர்கள் பலரும் இந்த விருந்தில் பங்கேற்றுச் சிறப்பிக்கின்றனர். தொடர்ந்து பல பண்பாட்டு நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றனர்.

5. வாழை இலையில் உண்பதால் கிடைக்கும் நன்மைகள் யாவை?

    - வாழையிலையில் உணவு உண்பவர்களுக்கு நோய்கள் வருவதில்லை. தொடர்ந்து வாழையிலையில் உணவு உட்கொண்டு வந்தால் தோல் பளபளப்பாகும்.
    - உடல் நலம் பெறும், மந்தம், வலிமைக்குறைவு, இளைப்பு போன்ற பாதிப்புகள் நீங்கும். பித்தம் தணியும்.
    - வாழையிலையின் மேல் இருக்கும் பச்சை தன்மை உணவை எளிதில் சீரணமடையச் செய்வதுடன் வயிற்றுப் புண்ணை ஆற்றும் தன்மை கொண்டது.
    - நன்கு பசியைத் தூண்டுகிறது. வாழையிலையில் உண்பவர்கள் நோய்நொடியின்றி வாழ இயலும்.

6.விருந்தோம்பல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகள் யாவை?

- இல்வாழ்க்கை நடத்துவது எல்லாம் தன்னிடத்து வந்த விருந்தினரை உபசரிப்பதே. அனிச்ச மலர் முகர்ந்து பார்த்தாலே வாடிவிடும். அதுபோல விருந்தினரோ முகம் வேறுபட்டு நோக்க வாடிவிடுவர்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து

7.சிலப்பதிகாரம் உணர்த்தும் விருந்தோம்பல் குறித்து எழுதுக:

- கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி கோவலனைப் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணியே வருந்துவதாக சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். இல்லறக் கடமைகளில் விருந்தோம்பும் பண்பு உயர்வானது என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

"............ தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை".

8. கம்பரும், செயங்கொண்டாரும் விருந்து பற்றிக் கூறும் கருத்துகள் யாவை?

    - "கல்வியும், செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும்" செய்வதாகக் கம்பரும் "வந்த விருந்தினர்களும், வறியவர்களும் அருகருகே அமர்ந்து உண்டதனைக் கண்டு முகமலர்ச்சி அடையும்

தேவர்கள்" என்று செயங்கொண்டாரும் விருந்தோம்பலைப் புகழ்ந்துள்ளனர்.

- "பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால் வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும் விருந்தும் அன்றி விளைவன யாவையே"
    - கம்பராமாயணம்
- ''விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல

9.தனித்து உண்ணாமை குறித்து கூறுக.

- தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.
- அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோரால் தான் உலகம் நிலைபெற்று வாழ்கிறது என்கிறது புறநானூறு.

"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும் இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே.... -புறநானூறு.

10.நற்றிணை நூலில் விருந்தோம்பும் பண்பு குறித்த கருத்து யாது? (அல்லது) குடும்பத்தலைவியின் நல்லியல்பு பற்றி எழுதுக.

நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு என்பதை நற்றிணை நூல் எடுத்தியம்புகிறது.

"அல்லல் ஆயினும் விருந்துவரின் உவக்கும்''

11.நிலத்திற்கேற்ற விருந்து பற்றி எழுதுக.

- தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த நிலத்திற்கேற்ப தங்கள் நிலத்தில் விளைந்ததையும் தொழில் சார்ந்த பொருள்களையும் விருந்துண்ண அமைத்தனர் என்பது சங்க இலக்கியங்கள் வாயிலாக தெரிகிறது.
- நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை.

12. அற உணர்வும் தமிழர் மரபும் குறித்து எழுதுக.

வினா எண்.6, 7, 8 ற்கான விடைகள் முழுவதும்.

13. விருந்தோம்பல் என்றால் என்ன? இது குறித்து தொல்காப்பியர் கூறும் விளக்கம் யாது?

தம் வீட்டுக்கு வரும் விருந்தினரை முகம் மலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவது விருந்தோம்பல் எனப்படும். முன்பின் அறியாத புதியவர்களே விருந்தினர் எனப்படுகின்றனர். "விருந்தே புதுமை" என்ற தொல்காப்பியரின் கூற்றே இதற்குச் சான்றாகும்.

14. பண்டைத் தமிழரின் வழியனுப்பும் முறை பற்றி எழுதுக.

"காலின் ஏழடிப் பின் சென்று" - பொருநராற்றுப்படை பொருநராற்றுப்படை கூறும் பண்டைத் தமிழர்கள் வீட்டிற்கு வந்த விருந்தினர் திரும்பிச் செல்லும்போது அவர்களைப் பிரிய மனமின்றி வருந்தினர் மேலும் வழி அனுப்பும் பொழுது அவர்கள் செல்லவிருக்கின்ற நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் வரை ஏழு அடி நடந்து சென்று வழி அனுப்பினர் என்று பொருநராற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

15.சத்திரங்கள் உருவாக்கப்பட்டதன் காரணம் யாது?

சங்ககாலத்தில் இருந்தே அரசராயினும் வறியோர் ஆயினும் விருந்தினர்களைப் போற்றினர். கால மாற்றத்தில் புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது. விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகி நாயக்கர் மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சித்திரங்கள் வழிச் செல்வோர்க்காக கட்டப்பட்டன.

16. விருந்தோம்பல் அன்றும் இன்றும் குறித்து எழுதுக.

அன்று

புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்க திண்டும் அமைத்தனர்.

இன்று

அறிமுகம் இல்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பது இல்லை.

அன்று

திருமணத்தை உறுதி செய்தல், திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனை புகுவிழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர். அப்போது விருந்தினர்களை வரவேற்று உணவளித்து மகிழ்ந்தனர்.

இன்று

காலப்போக்கில் வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக் கூடங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டன. சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழி அனுப்பும் வரை திருமண ஏற்பாட்டாளர்களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காண முடிகிறது.